தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, "தமிழ் நாடு 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73) நிறை வேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

திரு. க. உரா. எட்மண்ட் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அடுத்த பில்லை எடுத்தாகிவிட்டது.

திரு. துரை கோவிந்தராசன் : எங்கள் பக்கமே திரும்ப கிறீர்கள். நாங்கள், பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால், அதைக் கேட்பதற்கு முன்னாலேயே ஒன்றும் இல்லையென்றால், எப்படித் தான் பேசுவது ?

1973 டிசம்பர் 1]

திரு. க. உரொ. எட்மண்ட்: பாயிண்ட் ஆப் ஆர்டரை எப்பொழுது வேண்டுமானாலும் எழுப்பலாம். வழக்கமாக எந்த பில் வந்தாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசிய பிறகு, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்து பேசுகிறார்கள். அவர்கள் விளக்கம் கொடுத்தாலும், பேசிய உறுப்பினர்களுக்குச் சந்தேகம் எழுந்தால், அதைக் கேட்பதற்கு 'பிரீசிடென்ட்' இருக்கிறது.
There is a precedent which is followed in the House.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்டத்திற்கு ஏதாவது அமென்ட்மென்ட் கொடுக்கப்பட்டால் அதன்மீது சந்தேகம் கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன்: கேட்கக் கூட முடியவில்லையே.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73).

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திருத்தச் சட்டத்தைப் பற்றிய விளக்கத்தை நான் ஆங்கிலத்தில் படிப்பதை அவையினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன். அதிலே உள்ள சட்டத்தைப்பற்றிய சில விளக்கச் சொற்கள் ஆங்கிலத்திலே இருக்கிறபொழுது அவை

---

* 26—11—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.